கல்யாண முகூர்த்தப் புடைவைகளின்
கைராசியான ஸ்தாபனம்
சீமாட்டி
ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை
கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு,
பருத்தி புடைவைக் கடல்
சீமாட்டி
ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 05 சனிக்கிழமை (20 – 11 – 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 357

அளவெட்டியில் படையினர் நடு

அளவெட்டி, நவ. 20

அளவெட்டி, மாதகல் இராணுவ முகாம்களில் இருந்து நேற்று முன்தினம் இரவு சுற்றுப் புறப் பகுதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இரவு 7 மணியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இத்துப்பாக்கிப் பிரயோகம் இரவு முழுவதும் நீடித்தது. இதனால் அப்பகுதியை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இரவு முழுவதும் பீதியுடன் கழித்தனர். (உ 13-15)

மதத் தலைவர்கள் கூட்டாகக் கண்டனம்

தமிழர்களை ஆளும் தார்மீகப் பொறுப்பை ஸ்ரீலங்கா அரசாங்கம் இழந்து விட்டது!

தேசிய கொடி ஏற்றலுடன் நாளை மாவீரர் வார நிகழ்வுகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 20

தமிழ் மண்ணையும் மக்களையும் காப்பதற்காக விடுதலைப் போரில் தம்மை ஆகுதியாக்கிக் கொண்ட மாவீரர்களை நினைவு கூர்ந்து, அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் தமிழீழப் பகுதி எங்கும் நாளை ஆரம்பமாகின்றன.

மாவீரர் வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணக் குடாநாடு எழிற்கோலம் பூண்டிருக்கிறது.

நாளை காலை ஒன்பது மணிக்கு தேசியக்கொடி ஏற்றுவதுடன் மாவீரர் வார நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

பாடசாலைகள், அரச திணைக்கள அலுவலகங்கள், அரசாங்க செயலகம், உதவி அதிபர் செயலகங்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமையகங்கள், தெங்கு பனம் பொருள் சங்கத் தலைமையகங்கள், சனசமூக நிலையங்களில் தேசியக் கொடி ஏற்றப்படும்.

முதன்மையான கொடியேற்றும் நிகழ்வுகள் பாடசாலைகளை மையமாகக் கொண்டு நடைபெறும். கொடியேற்றத்தைத் தொடர்ந்து அமைதி வணக்கம், மலரஞ்சலி என்பன இடம்பெறும்.

மாவீரர் வாரத்தையொட்டி

(3 ஆம் பக்கம் பார்க்க)

பொது நிறுவனங்கள் மீதான குண்டுவீச்சு திட்டமிடப்பட்ட அரச பயங்கரவாதமே!

யாழ்ப்பாணம், நவம்பர் 20

புனித வழிபாட்டுத் தலங்கள் மற்றும் ஆஸ்பத்திரிகள் போன்ற பொதுச்சேவை நிலையங்கள் மீது நடத்தப்படும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் திட்டமிடப்பட்ட அரச பயங்கரவாதமேயன்றி வேறில்லை.

இத்தகைய செயல்கள் மூலம் தமிழ் மக்களை நிர்வகிக்கும் பொறுப்பை ஸ்ரீலங்கா அரசு இழந்து விட்டது.

—இவ்வாறு யாழ்ப்பாணத்தில் உள்ள சர்வமதத் தலைவர்கள் கண்டித்திருக்கின்றனர்.

மருத்துவமனைகள், தேவாலயங்கள், செயலகங்கள் போன்றவை மீது ஸ்ரீலங்கா விமானப் படையினர் நடத்தும் குண்டு வீச்சுத் தாக்குதல்களை கண்டித்து சர்வ மதத் தலைவர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் இந்த அறிக்கையில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள், யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தரநாயகம், தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் ஆயர் அதி. வண. டி. ஜே. அம்பலவாணர் ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கும் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ 1983 இல் இருந்து தமிழர்கள் மிக மோசமான முறையில் படுகொலை செய்யப்பட்டு வருவது குறித்து நாம் மிகுந்த வருத்தமடைந்துள்ளோம்.

★ தமிழர்களைப் பய

(3 ஆம் பக்கம் பார்க்க)

3,500 பரல் மண்எண்ணெய் நேற்று வந்து சேர்ந்தது

மாத இறுதிக்குள் மேலும் 4,500 பரல் வந்து சேரும்

யாழ். மாவட்டத்துக்கு நாலாயிரத்து 500 பரல் மண் எண்ணெய் இம்மாத இறுதியிலும் எடுத்து வரப்படவிருக்கிறது.

நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'கோமாரி' கப்பலில் எடுத்து வரப்பட்ட மூவாயிரத்து 498 பரல் மண் எண்ணெய் இறக்கும் வேலைகள் நேற்று உடனடியாக ஆரம்பமாகின.

இக்கப்பல் இவற்றை இறக்கிவிட்டு, கொழும்பு திரும்பி மேலும் நாலாயிரத்து 500 பரல் மண்எண்ணெயை ஏற்றிக்கொண்டு இம்மாத இறுதியில் பருத்தித்துறைக்கு வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நவம்பர் மாதத்துக்குரிய ஒதுக்கீடான நாலாயிரத்து 500 பரல் மண்எண்ணெயை இம்மாத இறுதிக்குள் கொழும்பில் இருந்து வடக்கே அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு பாதுகாப்பு அமைச்சு யாழ். செயலகத்தை கேட்டுள்ளது.

நேற்று வந்து சேர்ந்த 'கோமாரி' கப்பலில் மண் எண்ணெயுடன் தேங்காய் எண்ணெய், தார், கைக்கூள் ஆகியனவும் எடுத்துவரப்பட்டுள்ளன.

இக்கப்பலில் தபால் பொதிகள் எதுவும் எடுத்துவரப்படவில்லை என்றும் —

கப்பலில் தபால் பொதிகளை ஏற்ற எடுக்கப்பட்ட முயற்சி கடைசி நேரம் வரை கைகூடவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

வன்னியில் ஐம்பது பேருக்கு மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு

வன்னிப் பிரதேசத்திலும் தமிழீழ மீட்புநிதிக் கடன் செலுத்தியோரில் ஐம்பது பேருக்கு கடன் மீளளிப்புச் செய்யப்படவிருக்கிறது.

இவ்வாண்டு கடன் பங்களிப்புச் செய்தவர்களில் ஐம்பது பேருக்கே மாவீரர் வாரத்தின் போது கடன் மீளளிக்கப்படவிருப்பதாக தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் திரு. செ. வெற்றியரசன் தெரிவித்தார்.

மீட்பு நிதிக்கடன் செலுத்தியோரில் நூறு பேருக்கு மாதாந்தம் கடன் மீளளிப்புச் செய்யும் திட்டத்தின் கீழ் —

கடந்த பன்னிரண்டு மாதங்களுக்குரிய மீளளிப்பாக ஆயிரத்து இருநூறு பேருக்கு — யாழ். மாவட்டத்தில் —கடன் மீளளிப்புச் செய்யப்படவிருப்பது தெரிந்ததே.

அதற்கு மேலதிகமாக வன்னியில் ஐம்பது பேருக்கு இம்முறை கடன் மீளளிக்கப்படவிருக்கிறது. (உ-3)

பருத்தித்துறைக் கடலில் கடற்படையினர் தாக்குதல்

மூன்று மீனவர்கள் காயம்; படகு சேதம்

வடமராட்சி, நவ. 20

பருத்தித்துறை கற்கோவளம் முதல் நாகர் கோயில் வரையான கடற்பிரதேசத்தில் நேற்றுக் காலை மீன் பிடித்துக் கொண்டிருந்தோர் மீது கடற்படையினர் சுட்டதில் மூவர் காயமடைந்தனர்; ஒரு படகு சேதமானது; சில கால்நடைகள் உயிரிழந்தன.

காங்கேசன்துறைப் பகுதியிலிருந்து வெற்றிலைக் கேணிப் பக்கமாகச் சென்று கொண்டிருந்த கடற்படைப் படகு ஒன்றிலிருந்தே நேற்றுக் காலை 6.30 மணி முதல் 7 மணி வரை இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

கடற்படையினர் சுட்டபோது மீனவர்கள் தத்தமது படகுகளிலிருந்து கடலுக்குள் பாய்ந்து ஒருவாறு தப்பி கரை வந்து சேர்ந்தனர்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

பூநகரித் தாக்குதலில்.

பலியான படையினருக்காக தெற்கில் துக்கம் அனுஷ்டிப்பு

பூநகரியில் கடந்த வாரம் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் உயிரிழந்த — நூற்றுக்கணக்கான — படையினருக்காக தெற்கில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

கொல்லப்பட்ட படையினருக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் தென்னிலங்கையில் கடைகள், அலுவலகங்கள் மற்றும் வாகனங்களில் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருக்கின்றன.

இவ்வார இறுதியில் நடைபெறவிருந்த பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் அனைத்தும், உயிரிழந்த படையினரை கௌரவிக்கும் முகமாக இரத்துச் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காயமுற்ற படையினரை டி. பி. பார்வையிட்டார்

கொழும்பு, நவ. 20

பூநகரித் தாக்குதலில் காயமடைந்த படையினரை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா நேற்று பார்வையிட்டு ஆறுதல் கூறினார்.

கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரிக்கும், கோட்டே ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரிக்கும் நேற்று விஜயம் செய்த ஜனாதிபதி, அங்கு சிகிச்சை பெறும் படையினரைப் பார்வையிட்டார்.

இவ்விரு ஆஸ்பத்திரிகளிலும் 476 படையினர் சிகிச்சை பெறுகின்றனர்.

மேலும் பல படையினர் அநுராதபுரம் மற்றும் பனாகொடை ஆஸ்பத்திரிகளிலும் கொழும்பு பெரியாஸ்பத்திரியிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (உ 3)

வை.கோபாலசாமியின் ஆதரவாளருக்கும் கல்தா!

தி. மு. க. தலைமைப்பீடம் முடிவு

சென்னை, நவ. 20

அண்மையில் தி. மு. கவில் இருந்து வெளியேற்றப்பட்ட வை. கோபாலசாமியின் ஆதரவாளர்களையும் கட்சியில் இருந்து விலக்க தி. மு. கழக தலைமைப்பீடம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கு முன்னேற்பாடாக— தி. மு. கவின் 9 மாவட்டச் செயலாளர்கள், சட்டத்துறைச்செயலாளர் எல். கணேசன், முன்னாள் சட்டசபை உறுப்பினர் மலர்மன்னன், முன்னாள் மாநில அமைச்சர் சந்திரசேகரன் ஆகியோரிடம் விளக்கம் கோரி தி. மு. க. பொதுச்செயலாளர் க. அன்பழகன் கடிதங்கள் அனுப்பியுள்ளார். (உ-எ)

தென்னிலங்கையில் பலநூற்றுக்கணக்கான

படையினரின் இறுதிச்சடங்குகள்: அதை ஒட்டி பலத்த பாதுகாப்பு

கொழும்பு, நவ. 20

பூநகரித் தாக்குதலில் உயிரிழந்த — பல நூற்றுக்கணக்கான — படையினரின் இறுதிச் சடங்குகள் தெற்கில் நடைபெற்று வருவதை ஒட்டி தென்னிலங்கையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

இறுதிக் கிரியைகள் நடைபெறும் பகுதிகளில் ஆங்காங்கே இனவாத வன்செயல்கள் வெடிக்கலாம் என்ற அச்சம் காரணமாகவே முன்னெச்சரிக்கையாக பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் பதற்றம் — நிறைந்த — முக்கிய இராணுவப் பகுதிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாக செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன.

நாட்டின் பல இடங்களிலும் சோதனைச் சாவடிகளை படையினர் அமைத்து இருந்தனர்.

நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

எவ்வகையான பிரச்சினைகளையும் சமாளிக்கக் கூடிய விதத்தில் மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

பூங்கரியில் புலிகள் தரப்பில் இஸ்ரேலியரும் இருந்தனராம்

காயமுற்ற சிப்பாய்கள் கூறுகின்றனர்

கொழும்பு, நவ. 20

பூநகரித் தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் இஸ்ரேலியர்களும் சேர்ந்து போரிட்டார்கள் என்று கொழும்பில் செய்தி வெளியாகி உள்ளது.

பூநகரித் தாக்குதலில் காயமுற்று கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் சிப்பாய்கள் சிலர், புலிகள் தரப்பில் வெள்ளைக்காரர் நின்று போரிட்டதைத் தாம் கண்டதாகத் தெரிவித்தனர் என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் —

விடுதலைப்புலிகள் தரப்பில் இஸ்ரேலியர்களோ அல்லது வேறு எந்த வெளிநாட்டவருமோ சேர்ந்திருக்கவில்லை என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் மறுத்தன.

தாக்குதலின் போது காயமுற்ற சிப்பாய்கள் திகில் அடைந்து, பயப்பிராந்தியினால் பாதிக்கப்பட்டு, மனம்குழம்பி, பேதலித்தனர்.

(3ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்நாடு விடுதலைப்படை தமிழகத்தில் தாக்குதல்

சென்னை, நவ. 20

தமிழ்நாடு தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள குள்ளன்வாடி பொலீஸ் நிலையத்தின் மீது நேற்று முன்தினம் கும்பல் ஒன்று குண்டு வீசித் தாக்குதல் நடத்தியது.

இத்தாக்குதலில் கான்ஸ்டபிள் ஒருவர் பலியானார் மற்றும் மூன்று கான்டபிள்கள் காயமுற்றனர்.

தாக்குதலின் பின் பொலீஸ் நிலையத்துக்கு அருகில் ''தனித் தமிழ் நாடு பெறப் பாடுபடுங்கள் — தமிழ் நாடு விடுதலைப்படை'' — என்று எழுதப்பட்ட சுவரொட்டி காணப்பட்டது.

1991 இல் புத்தூர் பொலீஸ் நிலையத்தையும் கடந்த ஆண்டு அண்ணாமலைப் பொலீஸ் நிலையத்தையும் இந்தப் படையினரே தாக்கியதாகக் கருதப்படுகிறது.

சுதந்திரக் கட்சியைச் சாடி நாடாளுமன்றில் அனுரா உரை

ஐ.தே.கவில் சேர்ந்தபின் நேற்று முதல்தடவையாக பேச்சு

கொழும்பு, நவ. 20

ஐக்கியதேசியக் கட்சியில் அண்மையில் சேர்ந்து கொண்ட பின்னர் அனுரா பண்டாரநாயக்கா நேற்று நாடாளுமன்றத்தில் முதல் தடவையாகப் பேசினார்.

வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு அவர் உரையாற்றிய போது சபையில் அவரது தாயாரும் எதிர்க்கட்சித் தலைவியுமான சிறிமாவோ பண்டாரநாயக்கா இருக்கவில்லை.

எதிரணி ஆசனங்கள் பெரும்பாலும் காலியாக இருந்தன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

மூச்சந்தி முரளி

யாழ். நகரப் பகுதி மீது

'புக்காரா' வட்டமிட்டதால் மக்கள் மத்தியில் பதற்றம்

யாழ்ப்பாணம், நவ. 20

நேற்று பிற்பகல் 2 மணி அளவில் யாழ். நகரம் மற்றும் யாழ்ப்பாணப் பகுதிகள் மீது வட்டமிட்ட 'புக்காரா' விமானத்தினால் மக்கள் மத்தியில் பெரிதும் பதற்றம் ஏற்பட்டது.

சுமார் இருபது நிமிட நேரம் வேகத்தைக் கூட்டிக் குறைத்தும், உறுமியும், குத்திப் பதிவது போல பாவனை செய்தும் அது வட்டமிட்டது.

யாழ். ஆஸ்பத்திரிப் பகுதியையும் அது வட்டமிட்டது.

இதனால் பதற்றமடைந்த நோயாளர்கள் மற்றும் ஊழியர்கள் ஆஸ்பத்திரி கட்டடப் பகுதிகளில் இருந்து வெளியான பகுதிகளை நோக்கி ஓடினர்.

நேற்று சூரசங்காரத்தை ஒட்டி ஆலயங்களுக்குப் புறப்பட்ட பக்தர்கள் மத்தியிலும் பதற்றம் நிலவியது.

எனினும் ''புக்காரா'' அனர்த்தம் ஏதும் புரியாமல் சென்றதை அடுத்து மக்கள் மத்தியில் பதற்றம் நீங்கியது.

(உ-15-17-111-162)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் வரதலட்சுமி அருளானந்தம் B. A (Hons.) நினைவுமலர்

(யாழ்/ வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலய ஆசிரியையும் யாழ். பல்கலைக்கழக டிப்ளோமா கற்கை நெறி மாணவியும்)

மறைவு: 22 - 10 - 1993

ஆசிரிய உலகின் விளக்கு

''குடம்பை தனித்தொழியப் புள்பறந்தற்றே உடம்பொடுயிரிடை நட்பு'' என்றான் வள்ளுவன். ஆசிரிய உலகின் விளக்கென விளக்கமுற்ற வரதலட்சுமி அருளானந்தம் இன்று எம்மிடை இல்லை. உறங்குவது போலும் சாக்காடு என்பதை விளக்குவது போல ஆசிரியை அரனடி சேர்ந்த செய்தி இடியேறென இனிய உள்ளங்களை வாட்டியது. தனது பாசமிகு சேவையையும் உயிரனைய கணவனையும் பிரிந்து செல்ல ஊழ்வினை உருத்து வந்தூட்டிய மர்மந்தான் என்னவென ஏங்கும் இதயங்கள் பற்பல.

வண்ணையம்பதி வைத்தீஸ்வரக் கல்லூரியில் கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் மிக்க கலங்கரை விளக்கென ஒளிர்ந்த வரதா என்னும் சால்புடைய நங்கை நில்லாதன வற்றை நிலையின என்றுணர்தற்குப் பருவம் இதுவல்லவே.

உற்றார் உளமுருக, உடன் பிறந்தார் கண்ணீர் பெருக்க காலதேவனின் கட்டளை இவ்வளவு சீக்கிரம் வருமென எவரும் எண்ணாத நிலையில் நீணிலம் மறந்த செய்தி சித்தையை நெக்குருக வைக்குமன்றோ.

அரிது அரிது மானிடராதல் அரிது என்றாள் ஔவை. ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது என்றாள் இக்கூற்றிற்கு மேலும் மெருகூட்ட, அத்தகைய ஒப்பரிய பிறவியினை அடைந்த பெண்ணின் பெருந்தகையாள் கலைமாணிச் சிறப்புப் பட்டதாரியானார். தியாக உணர்வுடன் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டார். மாணவர் நயக்க, மற்றோர் வியக்க தன் தொழிலைத் தெய்வமென மதித்துப் பணி புரிந்தார். அன்னாரது மறைவு கல்வி உலகுக்குப் பேரிழப்பாகும்.

பாடையேறினும் ஏடது கைவிடேல் என்ற வகைக்கு நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் இருந்த போதும் பட்டப்பின் படிப்புப் பரீட்சை பற்றிச் சிந்தித்ததும், அதற்கான ஆயத்தத்தைச் செய்த திட சிந்தையோடு உடன் பிறப்புக்களுடன் உவகை பூத்ததும் அன்னாரின் கல்வி ஆர்வத்தை என்றும் எமக்கு பறை சாற்றிக் கொண்டிருக்கும். நவராத்திரி நன்னாளிலே நவையறு காட்சி நல்கும் கலைத் தேவியை நாடியோ இம் மண்ணை மறந்தீர் என கண்கள் நீர் பனிப்ப, நெஞ்சம் நெக்குருக துயருறும் சுற்றத்தைச் சோதர, சோதரிகளை, சால்புடைச் சான்றோரை எண்ணாதிருப்பதென்னே.

அருளானந்தப் பெயரினவின்
பாதியாகிப்
பெருவாழ்வு பெற்றுய்யப்
பேறுபெற்றும்
வரு நாளை வளமுள்ள
திருநாளை மறந்துபோலும்
அருவாகி உருவாகும்
அந்தணன் தாள்
சேர்ந்தனையோ

திரு நெறிய திகழ் கல்விப்
பேறுபெற்றே
வரு நாளில் வளமான
வாழ்வுகாண
உருவாய உனதன்புச்
சேயைவிட்டு
பெருமானார் பீடுடையான்
தாள்சேர்ந்ததேனோ செப்பு.

சி. வேலாயுதம்.
பிரதிக் கல்விப் பணிப்பாளர்.

நிறைவான இறைபக்தி கொண்டு இல்லறத்தை நல்லறமாக்கியவர்

அருளோங்கும் மெய்யன்பர்களே!

அமரவதி திருமதி வரதலட்சுமி அருளானந்தம் அவர்கள் சிவபதம் எய்திய செய்தி அறிந்தோம். நிறைவான இறைபக்தியும், இல்லறத்தை நல்லறமாக்கிய பெருமையும் உடையவர்.

வேலணையில் தலைசிறந்த கல்விசார் குடும்பத்தைச் சார்ந்தவர். ஆசிரியையாகப் பணிபுரிந்து நன்மதிப்புப் பெற்ற மாதரசி. கோயில் கைங்கரியங்களிலும் மிக ஈடுபாடுடையவர். இத்தகைய மேம்பாடுடையோரைக் காண்பதரிது.

நாம் அவருக்கு ஆற்றும் கைம்மாறு, அன்னாரின் ஜீவாத்மா எல்லாம் வல்ல பரம்பொருளின் பதம் சார்ந்து நித்திய ஆனந்த சாந்தி நிலை எய்த வேண்டுமென உளமாரப் பிரார்த்திப்பதே.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஸ்ரீ ஸ்ரீ
குருமஹா சந்நிதானம்
நல்லை ஆதீனம்

இறை உணர்வோடு இலட்சிய பாதையை மேற்கொண்டார்

என் பெருமதிப்புக்குரிய கலாநிதி நகுலேஸ் கதிர்காமநாதனின் அன்புச் சகோதரியாகிய திருமதி வரதலட்சுமி அருளானந்தம் அவர்களின் எதிர்பாராத மறைவு அதிர்ச்சியையும் ஆழ்ந்த கவலையையும் அளித்தது. வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தின் இளம் பட்டதாரி ஆசிரியையாகிய இவருக்கு சிறந்த ஓர் எதிர்காலம் இருப்பதாகப் பலரும் எதிர்பார்த்து இருந்தனர்; வளமான பழமரம் சூறாவளியால் சிதைந்தது போல் அவர்கள் இப்போது வருந்துகின்றனர்.

வேலணைத் தீவுப் பகுதியில் ஒரு விவசாயக் குடும்பத்தில் எழுவரில் ஒருவராய்த் திகழ்ந்த இவர், மற்றும் சகோதரர், சகோதரி போல் கல்வியில் சிறந்தோங்கினார்.

போர்க்கால அனர்த்தங்களினால் ஆடும் பம் பொருள் பண்டங்கள் எல்லாம் இழந்து வெறுமனே பிறந்த மண்ணில் இருந்து குடி பெயரப்பெற்றும், இன்னற்படும் மக்களோடு மக்களாய் தன் சொந்த மண்ணில் தூய நோக்குடனும், நேரிய உள்ளத்துடனும், இறை உணர்வோடும் ஓர் இலட்சியப் பாதையை மேற்கொண்டார்.

இவர் தனது 33ஆவது வயதில் தாம் நேசித்த கல்வியையும் மக்களையும் விட்டுப் பிரியும்போது யாழ். பல்கலைக்கழக கல்வி டிப்ளோமா கற்கை நெறியின் முதல் வருட மாணவியாகப் பயின்று கொண்டிருந்ததுடன், இவரின் ஆளுமையின் காரணமாக வித்தியாலயத்தின் ஆசிரிய வட்டத்தின் உப தலைவராகவும் விளங்கினார்.

இவரது மறைவினால் குடும்ப உறுப்பினர்கள் மட்டுமல்லாமல், வித்தியாலய மாணவர்கள் உடன் ஆசிரியர்கள் என்போரைச் சார்ந்த முழுச் சமூகமுமே பேரிழப்புக்குள்ளாகியிருக்கிறது. இவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டிக் கொள்வதுடன், அவரது குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அருள்திரு G. A. பிரான்சிஸ் யோசவ்
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

குடும்ப விளக்கின் மறைவு தாங்கொணாப் பேரிழப்பு

ஆசிரிய உலகில் சிறந்த கல்விச் சேவகியாக விளங்கியவர் திருமதி வரதலட்சுமி அருளானந்தம் அவர்கள். இவர்களுடைய எதிர்பாராத மறைவு திகிலடையச் செய்தமை குறிப்பிடத்தக்கது. இல்லற வாழ்வை இனிதாக நிறைவேற்றிக் கொண்ட நேரத்தில் இத்துன்பகரமான நிகழ்ச்சி ஏற்பட்டுவிட்டது. இதனை முன்னிட்டுக் கண்ணீர் சிந்தாதவர் எவரும் இருக்க மாட்டார்கள்.

வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் ஆசிரிய சங்கத்து உப தலைவராக இருந்து அரும் பணி ஆற்றியவர். இவர் கல்விக் தகுதியும் கடமைத் தகைமையும் நிறைந்தவர். ஆயிக் கணக்கான உயர் வகுப்பு மாணவர்களை கற்பித்து அவர் தம் முன்னேற்றம் கண்டவர்.

இக் குடும்ப விளக்கின் மறைவு தாங்கொணாப் பேரிழப்பாகும். ஆனால் இவ்வுலகுக்கு அனுப்பியவன் குறிப்பிட்ட காலம் முடிய எடுத்துவிடுகின்றான் என்பதனை யார்தான் தடுக்க முடியும். இதுதான் நியதி என்பதைத் திரும்பத் திரும்பச் சொல்லி ஆறுதல் அடைய வேண்டுமென்று அமரர் வரதலட்சுமியின் கணவனாருக்கும், அருமைக் குழந்தைக்கும் எடுத்துக் கூறி, அனுதாபம் தெரிவித்து மறைந்தவருக்கு அஞ்சலி செலுத்தி அமைவதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து அமைகின்றேன்.

தர்மகர்த்தா அப்பாக்குட்டி J.P.,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

இதயபூர்வ அஞ்சலிகள்

யாழ். பல்கலைக்கழக மாணவியாகப் படித்தார். சிறப்புப் பட்டதாரியாக வெளியேறினார். அதே கற்கைநெறியில் சமகால மாணவராக அவரது கணவர் அருளும் கற்றுத் தேர்ந்தார்.

ஆசிரியர் பணியில் ஆர்வத்துடனும், நேர்மையுடனும் ஈடுபட்டு இருந்தார். இனிதான இல்லற வாழ்க்கையில் மழலை மகன் 'அர்ச்சுனா' வையும் பெற்றெடுத்தார்.

கடமை முடிந்தது போலும், மிகச் சடுதியாக எதிர்பாராதவிதமாக, நம்ப முடியாதவாறு இவ்வுலகை விட்டு வரதலட்சுமி பிரிந்துவிட்டார். கணவன், நெருங்கிய உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் பெரும் அதிர்ச்சியினையும், ஆழ்ந்த கவலையினையும் வரதலட்சுமியின் மறைவு ஏற்படுத்தியுள்ளது. அமரத்துவம் எய்திய வரதலட்சுமிக்கு எமது இதயபூர்வமான அஞ்சலிகள்.

பேராசிரியர் என். பாலசிருஷ்ணன்,
யாழ். பல்கலைக்கழகம்.

பண்பான ஓர் அபிமானி

மையால் கலலையை வடிக்க முடியாது. அது, ஒரு துன்பியல் உணர்வு. உற்றார், உறவினர் ஊரார்க்கு தேற்றம் கூற முடியாது திணறுகிறேன். காலமென்னும் கரத்தால் தான் கண்ணீர் முத்துக்களைத் துடைக்க முடியும். ஆசிரியையின் பண்புக்கேற்ப கல்வியுலகில் நறுமணம் பரப்பியவர் ஆசிரியை வரதா.

கல்வி, கல்லூரி அறையில் ஆரம்பமாவதில்லை; கருவறையில் ஆரம்பமாகின்றது என்ற மூல தத்துவத்தை உணர்ந்த ஆசிரியை, ஆசிரியையாக இருந்து நல்ல பிரஜைகளை உருவாக்கும் போது காலன் அவரைப் பிரித்து விட்டான். எனது பத்திரிகையின் பண்பான ஓர் அபிமானியை இழந்து விட்டதற்கு மிகவும் வருந்துகிறேன்.

சி. சிவஞானசுந்தரம்
ஆசிரியர் (சிரித்திரன்)

ஆளுமைமிக்க ஆசிரியை

வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஐந்து ஆண்டுகள் மாணவர் போற்றும் வகையில் பொருளியல், சமூகவியல் பாடங்களைப் போதித்த நல்லதோர் ஆசிரியை திருமதி வ. அருளானந்தம் பொதுப் பரீட்சைகளில் நற்பெறுபேறு கிடைக்க நற்பணியாற்றியவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய மூன்றையும் தனது இலட்சியமாகக் கொண்டு உழைத்தவர். தனது அறிவையும் ஆற்றலையும் மாணவர் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் பாடுபட்டவர். எண்ணுவதைத் துணிவுடன் எடுத்துரைக்கும் ஆளுமை மிக்க ஓர் ஆசிரியை.

''சாந்துணையும் கல்'' என்பதற்கொப்பப் பட்டப்பின் கல்வித் தகைமைச் சான்றிதழ் பரீட்சைக்காகக் கடமை லீவில் சென்றவர். இன்று எம் மத்தியில் இல்லை என எண்ணும் போது கவலை உண்டாகிறது. அறிவும், ஆற்றலும் மிக்க ஒருவரை எமது கல்லூரி இழந்து நிற்கிறது அன்னாரின் பிரிவு எமது கல்லூரிக்கு மட்டும் ஏற்பட்ட இழப்பல்ல. ஆசிரிய சமுதாயத்திற்கே ஏற்பட்ட ஒரு பேரிழப்பு. அவரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தார்க்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக!

வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
து. சந்தோசம்
அதிபர்

மாதரசி வரதாவின் பின்னணியின் முன்னணி

வேலணைத் தீவின் சிரசனைய 5ஆம் வட்டாரம் தனிச் சிறப்புக்கள் பலவற்றை தன்னகத்தே கொண்ட வனப்பு மிகு விவசாயக் கிராமம்.

இக்கிராமம் நன்னீர், பசுமை நிறை வயல்வெளிகள், பயன்தரு தோட்டங்கள், விவசாயக் குளங்கள், ஆலயங்கள், பாடசாலைகள் வியாபித்திருக்கும் வேலணையின் செறிவு.

தீவகத்தை நிர்வகித்த அன்றைய மணியகாரன், உடையார் முதல் அண்மைய பேரவை உறுப்பினர்வரை உதித்த, வாழ்ந்த நிர்வாகக் கேந்திரம்.

இக் கிராமத்தின் கல்விமான் நாகலிங்கம், சிங்கப்பூர் வைத்திலிங்கம், புலவர் பேரம்பலம், சித்தாந்தி பொன்னம்பலம் (பொட்டுப் பொன்னர்) அன்று அறிவாட்சி செய்தோரில் முத்தான முன்னோர். இவர்கள் தம் வழிவழி வந்த கொடியில் பூத்த மலர்தான் அமரவதி வரதலட்சுமி அவர்கள்.

இவரின் முன்னோர் பலர் அமெரிக்கா, சிங்கப்பூர், மலேஷியா ஆகிய நாடுகளில் பரம்பரையாக சர்வ வியாபகம் பெற்று சிறப்புறுகின்றனர். இவரின் பூட்டனாரின் சகோதரர் மருதயினார் அமெரிக்காவில் திருமறைக் கல்வி பயின்று அருட் திரு. தேவசகாயம் அடிகள் என மதிப்புடன் அமெரிக்க தேவாலயம் ஒன்றின் பிரதம குருவாக கடமை புரிந்தார்.

இன்றும் 'அமெரிக்கன் வளவு' என அழைக்கப்படும் சலையாவத்தை தோட்டம் நான்காம் தலைமுறையாக இவர் தம் குடும்பத்தினரின் உரிமை ஆதனமாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

நா. செல்லத்துரை
வேலணை,

ஒற்றுமையின் பாலம்

ஆசிரியர்களுக்குரிய அனைத்து இலட்சணங்களுடன் கொண்டு, இலட்சியத்துடன் கடமை புரிந்த ''வரதா'' ஆசிரியை இன்று எம்மத்தியிலில்லை. மாணவர் உளமறிந்து, அவர்களுக்கேற்ற விதத்தில் கற்பிப்பதனை, தனது கல்வி பட்ட மேற்படிப்பினை பூர்த்தி செய்மு முன்பே கைக்கொண்டவர். அந்தளவிற்கு மாணவர்களையும், கற்பித்தல் பணியையும் நேசித்தவர்.

எம் கல்லூரி ஆசிரியர் நலன்புரிச் சங்க உப தலைவராக இருந்து, ஆவர் ஆற்றிய பணிகள் நினைவுகூரத்தக்கன.

ஓய்வு பெற்றும், மாற்றலாகியும் சென்ற எம் கல்லூரி ஆசிரியர்களைக் கௌரவிப்பதிலும், பாராட்டிப் பேசுவதிலும் அவர் என்றும் பின்னின்றதில்லை. நலன்புரிச் சங்க தலைவர் சமூகமளிக்க முடியாத வேளைகளில், தானே தலைமை தாங்கி மிகச் சிறப்பாக சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்ற ஆளுமையும் ஆசிரியர்கள் மத்தியில் ஒற்றுமை நிலவ ஓர் பாலமாகச் செயற்பட்ட பாங்கும் யாவர்க்கும் ஓர் முன் மாதிரியாகும்.

பல ''கல்வி மலைகளை'' உருவாக்கத்தக்க ஒரு கல்விச் சிற்பி கலைமகள் விழா வின் போது சரிந்தமை கல்விச் சமூகத்திற்கு ஓர் பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செ. செல்வராஜா
செயலாளர்
ஆசிரிய நலன்புரிச் சங்கம்
யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி.

அறிவுப்பசிதீர்த்த தாரகை

ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்
நீள்வினையால் நீரும் கொடி''

என்னும் இலக்கணத்திற்கு இலக்கியமாய் அமைந்தது வேலணை கிழக்கு நகுலேசபிள்ளை குடும்பம். கல்வி ஒருவர்க்கு கேடில் விழச் செல்வம் என்பதறிந்து கல்விச் செல்வத்தைக் கருத்துடன் அணைத்துக் கொண்ட குடும்பமது.

இத்துணை சிறந்த குடும்ப வானில் ஒளிர்ந்த தாரகைகளிலே ஒன்று ஒளிவீசி உதிர்ந்தது. வரதலட்சுமியாக வரதக் கரம் தாங்கி மாணவர்களின் அறிவுப்பசியை உவப்புடன் தணித்த தாரகை அது.

அருள் ஆனந்தத்துடன் கூடிய வரதலட்சுமி இல்லறமாம் நல்லறத்திற்கும் இலக்கியமானார்.

வரதலட்சுமி அருளானந்தத்தின் மறைவு, கைப்பிடித்த கணவன், அருமை மகன், அன்புச் சகோதரர்கள், பிணைப்பால் ஒன்றிய உறவினர்களுக்கு மட்டுமின்றி அவர் அறிவிலும் அனுபவத்திலும் பிறந்த கல்விப்போதனை ஆற்றலின் பயனை இழந்து தவிக்கும் எண்ணற்ற மாணவர்களுக்கும் ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும்.

ஆனால் ''உறங்குவது போலும் சாக்காடு'' என்னும் வள்ளுவர் வாக்கை ஓர்ந்து அமைதி காண்போமாக. புத்தேளிர் வாழும் உலகில் பெருஞ்சிறப்புப் பெறுவள் வரதலட்சுமி.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கலாநிதி க. கனகராசா ஜே.பி.

அர்ப்பண உணர்வுடன் கடமை

22 - 10 - 1993 இல் இறைபதம் அடைந்த திருமதி வரதலட்சுமி அருளானந்தம் (வரதா) அவர்களின் மறைவு எவரும் எதிர்பாராததாகும். அவருடைய மறைவு யாழ்ப்பாணக் கோட்டத்தின் ஆசிரிய ஆளணியில் நிரப்ப முடியாத ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தி விட்டது.

எமது பட்டப்பின் கல்வித் தகைமை நெறியின் பகுதி நேர முதலாம் ஆண்டு மாணவியாக 'வரதா' வைச் சந்திப்பதற்கு முன்பே யா / வைத்தீஸ்வரா வித்தியாலயத்தின் ஆசிரியையாக அவரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அப்போதே அவருடைய ஆளுமையின் இயல்பையும், சிறப்பையும் உணர முடிந்தது.

தனது கடமையில் கண்ணாகவும், முழுமனதாகவும் அர்ப்பணத்துடனும், கண்ணியத்துடனும் செயற்பட்டு வந்த ஓர் ஆசிரியையை அவர் உருவில் நான் கண்டேன். தான் செய்ய வேண்டிய எதையும் அடக்கத்துடன், 'அலட்டிக் கொள்ளாமல்', நிறைவேற்றும் இயல்புடையவராக அவர் விளங்கினார். அத்தகைய ஆசிரியர்கள் தேவைப்படுகின்ற இன்றைய காலகட்டத்தில் அவரது மறைவு தாங்க முடியாத அதிர்ச்சியைத் தருவதாகும்.

கல்வியியற்றுறையின் மாணவியாக அவர் சேர்ந்த காலத்திலிருந்து அவருடைய முயற்சியின் சிறப்பினை என்னால் கண்டுகொள்ள முடிந்தது. அன்பு, பண்பு, அடக்கம் அத்தனையும் பொருந்தியவராக, அதே நேரத்தில் தன்னம்பிக்கை நிறைந்தவராக, அவர் விளங்கினார். வெற்றிப் பாதையில் முன்னேறிக் கொண்டிருந்த அவருடைய திடீர் மறைவு கற்றல் - கற்பித்தலுடன் தொடர்புடையவர்களுக்கு வேதனையைக் கொடுப்பதாகும்.

சமூகத்தின் இழப்பிலும் அவருடைய குடும்பத்தவரின் இழப்புப் பாரியதாகும். அவரை இழந்து தவிக்கும் அவருடைய குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவது இயலாதது; பல்வகைப்பட்ட பிரிவுகளில் இது தவிர்க்க முடியாதது என்ற உண்மையை ஏற்றுக் கொண்டு, எம்மை நாமே இடப்படுத்துவதுதான் ஒரே வழி. அதற்கு எல்லையறு பரம்பொருள் என்றும் உதவட்டும்.

வரதாவின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பேராசிரியர்
வ. ஆறுமுகம்
கல்வியியற்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

எண்ணும் எழுத்தும் தூக்கிய போர்க்கொடி

கண்கள் இமையைக் காக்க மறந்தது
மண்ணும் மரத்தை மாய்க்க விரைந்தது
எண்ணும் எழுத்தும் போர்க்கொடி தூக்கியது
வண்ணப் பேனை வடித்து நீர் போக்கியது.

அன்பிலே அன்னையாக ஆசிரியத்தன்மையோடு
தென்புடனே எமை உயர்த்த தெளிவான வன்மையோடு
காலமெல்லாம் கண்விழித்து கனவிலும் எமை நினைத்து
கோல மெல்லாம் சிதைந்து இன்று போனதெங்கே தனித்து

வீசிய காற்றிடையே உம் குரல் ஒலிக்கிறது
பேசிய பேச்செல்லாம் பெரு வடிவாய் பலிக்கிறது
வெண்முகில் தன்னிடையே உம்முடல் தெரிகிறது
கண் முகில் நீரி சொரிய கடி மனமும் உருகுகிறது
பொருளியல் பாடத்தை எம்மிடையே பிழைநீங்க
அருளிய வேடத்தார் உம்மினிய உயிர் ஓங்க
அருளானந்தம் ஆசிரியை அன்னாரின் பெயர் ஓங்க
இருளகன்று இறைவனடி இணையாக சேர்ந்தோங்க
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அமரவதி திருமதி வரதலட்சுமி அருளானந்தம் அவர்களது குடும்பத்தினருக்கு எமது மனமார்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ப. சசிதரன்
உயர்தர மாணவர் மன்றம்,
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெறுமதியில்லா பேச்சுகள்!

வடக்கு-கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் விரும்பவில்லை. அதற்கான திராணியும் அதனிடம் இல்லை. அதனாலேயே வடக்கு-கிழக்கு யுத்த நிலை நீடித்துக் கொண்டே போகிறது. யுத்தம் முடிவில்லாமல் நீடிப்பதால் ஆயிரக் கணக்கான படை வீரரும் மக்களும் மடிந்தொழிகின்றனர்.

இவ்வாறு கருத்து நாடாளுமன்றத்தில் வெளியிட்டிருப்பவர் எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா.

இதே சிறிமாவோ பண்டாரநாயக்கா, அதே நாடாளுமன்றத்தில் ஆறு நாட்களுக்கு முன்னர் கூறியது என்ன? பூநகரித்தோல்வி ஸ்ரீலங்காவின் மிக இருண்ட நேரம். இத்தகைய நிலையை இனியும் தவிர்ப்பதற்கு நாட்டை யுத்த நிலையில் வைத்திருக்க வேண்டும்— என்பது அவரின் அன்றைய பேச்சு!

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு தான் உகந்த வழி என்றை ஐக்கிய தேசியக் கட்சி அரசின் நிலைப்பாட்டை முற்று முழுதாக ஆதரிக்கும் வகையில் அன்றைய பேச்சு அமைந்தது. இராணுவத் தீர்வுக்கான செயற்பாடு துரித கதியில் நடக்கவில்லை; அதற்குரிய நடவடிக்கைகள் பரந்த அளவில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஆளுங்கட்சியை விட மேலும் ஒரு படி மேலே சென்றார் அம்மை யார். அந்தப் பேச்சு அரசாங்கத்தின் மீது குற்றம் காணும் விதத்தில் அமைந்ததே அன்றி, இராணுவத் தீர்வு வெற்றி தராது என்று புத்திகூறும் விதத்தில் அமையவில்லை.

இப்போதும் யுத்தத்தை அவர் கண்டிக்கவில்லை. யுத்தம் தீடிக்கிறதே என்பது தான் அவரது கவலையாக இருக்கிறது.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐ. தே. கட்சி அரசு விரும்பவில்லை என்று குறைகாணும் சிறிமாவோ, அதனைத் தான் விரும்புகின்றாரா என்றால் இல்லை. அதற்கான திராணிஸ்ரீ ல. சு. கட்சிக்காவது இருந்திருப்பின் தெரிவுக் குழு விடமாவது தனது தீர்வுத் திட்டத்தைச் சமர்ப்பித்திருக்கலாம் அல்லவா?

தான் கண்ணாடி வீட்டில் இருந்து கொண்டு அடுத்த வீட்டிற்குக் கல்லெறியும் சிறிமாவோவின் இந்தப் போக்கு தென்னிலங்கை அரசியல் வாதிகளைப் பொறுத்தளவில் ஒன்றும் புதிதல்லவே!

தமிழர் பிரச்சினை தொடர்பாக எந்த நேரத்திலும், எந்த நிலைப்பாட்டையும் மேற்கொள்ளலாம் என்ற கருத்துடையவர்களாகவே அவர்கள் அன்று தொட்டு இன்று வரை விளங்குகிறார்கள். சிறிமாவோ மட்டும் அதற்கு விதிவிலக்காக முடியுமா? அதனாலேயே சணம் பித்தம் சணம் வாதம் என்ற நிலையில் அவர் தனது பேச்சுக்களில் சிறிதாகச் சுருதி பேதம் காட்டுகிறார்.

எது எப்படியோ, இராணுவத் தீர்வு மூலம் தமிழர்களை நசுக்குவது, அல்வாறு நசுக்கிக் கொண்டே சிங்களவருக்குச் சாதகமான ஒரு தீர்வை தமிழர் மீது திணிப்பது, ஒற்றையாட்சி அரசமைப்புக்குள்ளேயே ஒரு தீர்வை வகுப்பது ஆகிய நிலைப்பாடுகளில் தெற்கின் அரசியல் கட்சிகளுக்கிடையே எவ்வித கருத்து முரண்பாடும் இல்லை.

இத்தகைய நிலையில் தெற்கு அரசியல்வாதிகள், தமிழர் விவகாரத்தில் எப்படித்தான் கனியொழுகப் பேசினாலும், அவற்றைப் பொருட்படுத்துவதற் கில்லை. அவை பெறுமதியில்லாதவை. தமிழர் பிரச்சினைக்கு தமிழர்கள் தாமாகவே விடை— வழி— காண வேண்டும். தென்னிலங்கையர் தீர்ப்பார்கள் என்று கருதினால், கடல் வற்றும் வற்றும் என்று காத்திருந்து உடல் வற்றிச் செத்த கொக்கின் கதையாகிவிடும்.

மாவீரர் எழுச்சி வாரம்; இன்று நடக்கும் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ. 20

நாளை ஆரம்பமாகும் மாவீரர் எழுச்சி வாரத்தை ஒட்டி வட்டாரீதியாக தினமும் பல்வேறு வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இன்று மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள் பற்றிய விவரம் வருமாறு:-

நல்லூர் வட்டம் — காலை 10 மணிக்கு அரியாலை மத்தி வடக்கு செம்மணி வாய்க்காலுக்கு மண்முடை போடல், சந்தோசம் வீதியில் மரம் நடுகை.

யாழ். வட்டம் — காலை 9 மணிக்கு அத்தியடிப்பிள்ளையார் குறுக்கு வீதி துப்புரவு செய்தல், காலை 10 மணிக்கு யாழ். நகர் கிழக்கு மடம் வீதி துப்புரவு செய்தல், கொட்டடி காரைநகர் வீதி துப்புரவு செய்தல்.

கோப்பாய் வட்டம் — காலை ஆவரங்கால் மேற்கு நுணாவில் குள வாய்க்கால் புனரமைப்பு, சிறுப்பிட்டி கிழக்கு பாறூக் வீதி துப்புரவு செய்தல், கோப்பாய் தெற்கு கரவெட்டி குளம் புனரமைப்பு. (த)

எழுச்சி வார கருத்தரங்குகள்

மாவீரர் நாள் எழுச்சி வார கருத்தரங்குத்தொடரில்இன்று இரவு 7.30 மணிக்கு வட்டாரீதியாக நடைபெறும் கருத்தரங்குகளின் விவரம் வருமாறு:-

★ யாழ்ப்பாணம் — அத்தியடி ச. ச. நிலையம்.

★ நல்லூர் — அரியாலை அருணோதயா ச.ச. நிலையம்.

★ கோப்பாய் — கோப்பாய் வடக்கு சூசையப்பர் கோவிலடி.

★ உடுவில் — அளவெட்டி தெற்கு கலைவாணி ச. ச. நிலையம்.

★ சங்கானை — பண்ணாகம் விசுவத்தனை முருகன் கோவிலடி.

★ சண்டிலிப்பாய் — வடலியடைப்பு கலைவாணி ச. ச. நிலையம்.

★ தெல்லிப்பழை — செம்மாதெரு மயூரன் குடியிருப்பு.

★ உடுப்பிட்டி — அச்சுவேலி நாவற்காடு விக்கினேஸ்வரா ச. ச. நிலையம்.

★ கரவெட்டி — நெல்லியடி இருதயக் கல்லூரி.

★ கடற்புலிகள் (யாழ். மாவட்டப்)பிரிவுஏற்பாடுசெய்துள்ள கருத்தரங்கு வடமராட்சி கிழக்கில் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியில் நடைபெறும். (உ 3)

புலிகளின் குரல் வானொலி போட்டி பரிசளிப்பு இன்று

யாழ்ப்பாணம், நவ. 20

புலிகளின் குரல் வானொலியின் மூன்றாவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் பரிசு பெற்றவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இவர்களுக்கான பரிசுகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் நடைபெறும் கலைஞர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வில் வைத்து வழங்கப்படும்.

போட்டிகளில் பரிசு பெற்றவர்களின் விவரம் வருமாறு;

நாடகம்

முதலாமிடம்; திரு. இ. ரவிச்சந்திரன் எழுதிய 'சிறை'

இரண்டாமிடம்; வல்வை யூரான் எழுதிய ''அன்னை என்பவள்''

மூன்றாமிடம்: திரு. வ. வசந்தகுமார் எழுதிய ''பொறுப்பு''

சிறுகதை

முதலாமிடம்; திரு. க. சிவராசா எழுதிய ''இவனும் ஒரு பங்காளி''

இரண்டாமிடம்; திரு. வே. கிங்ஸ்லி எழுதிய ''அறுபடை அமர்க்களம்''

மூன்றாமிடம்; திரு. இரா. இராஜேஸ்கண்ணன் எழுதிய ''மனிதம் மட்டுமல்ல''

கவிதை

முதலாமிடம்; செல்வி ப. நாமகன் எழுதிய ''இன்றைய மாலையில்''

இரண்டாமிடம்; திரு. நிலாதமிழின்தாசன் எழுதிய ''உறக்கம் விட்டு எழுவீர்''

மூன்றாமிடம்; திரு. மு. விஜயராகவன் எழுதிய ''தாயே என்னைப் பிரசவித்தவிடு''

விமர்சனத்திற்கான பரிசு எவருக்கும் வழங்கப்படவில்லை. (த 15)

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை

விண்ணப்பங்களை எடுத்துவர ஏற்பாடு

எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி. சீ. ஈ. (சாதாரண) தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களையும் அனுமதி அட்டைகளையும் பருத்தித்துறைக்கு கொண்டு வந்து ஒப்படைக்க ஏற்பாடு செய்யுமாறு பரீட்சை ஆணையாளரிடம் யாழ். கல்வி அலுவலகம் கோரிக்கை விடுத்துள்ளது.

போக்குவரத்து சீர் இல்லாத காரணத்தால் இங்கிருந்து வரமுடியாதுள்ளதால், விமான மூலம் அவற்றை எடுத்து வந்து பருத்தித்துறையில் ஒப்படைக்குமாறு பரீட்சை ஆணையாளரிடம் கோரப்பட்டுள்ளது.

இப்பரீட்சை எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பித்து 15 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது.

பரீட்சைக்கான காலிதாதிகள் 'வாதுவ' கப்பல் மூலம் பரீட்சைப் பகுதி அதிகாரியால் ஏற்கெனவே எடுத்து வரப்பட்டுள்ளன. (இ-3)

மீட்புநிதி மீளவிப்பு: தீருத்தம்

தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளளிப்புத் திட்டத்தின் கீழ் மீளளிப்பு பெறத் தகுதியுடைய ஆயிரத்து 200 பேரின் கடன் பத்திர இலக்கங்கள் பிரிவு ரீதியாக நேற்றைய உதயனில் பிரசுரமாகியிருந்தது தெரிந்ததே.

அது தொடர்பாக பின் வரும் திருத்தங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் நிதித் துறையின் தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.

★ காரைநகர் பிரிவில் யா / கா / 867 இற்கு பதிலாக யா / கா / 869 என தவறாகப் பிரசுரமாகியுள்ளது.

★ கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவில் 1109 என்ற இலக்கமும் நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவில் 762 என்ற இலக்கமும் தெளிவில்லாமல் உள்ளன.

இன்று

''மல்லிகை'' யில் திரு. கா. சந்திரசேகரம் கால்நூற்றாண்டுகளாகச் செய்துவரும் பணியைக் கௌரவிக்கும் பாராட்டுவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தில் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் நடைபெறும். (க)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ. 30

தொலைக்கல்வி பயிற்சி ஆசிரியருக்கான செய்முறைப் பரீட்சைகளின் தொடர்ச்சி இன்று சனிக்கிழமை சகல தொலைக்கல்வி மத்திய நிலையங்களிலும் நடைபெறும் என பாடநெறி இணைப்பாளர் அறிவித்தார்.

மேலும் சிரேஷ்ட போதனாசிரியர்களை புதிய ''மொடியூல்''களை எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் பெற்றுக் கொள்ளும்படியும் கேட்கப்பட்டுள்ளது. (ஒ)

★ ★ ★

''கிருமிநாசனி பாவனையில் ஏற்படும் நன்மை தீமைகள்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று, இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலையில் நடைபெறும்.

உணவு மருந்து வகை ககாதார பரிசோதகர் திரு. த. மகாதேவா கருத்துரை வழங்குவார். (த-90)

★ ★ ★

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத்தின் கிராமிய அபிவிருத்திக் குழுவின் சார்பில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு உரும்பராய் கிராம அபிவிருத்திச் சபை மண்டபத்தில் மலர் அலங்காரக் கண்காட்சியும் விற்பனையும் நடைபெறும். (ஒ- 111)

★ ★ ★

'யுனிசெவ்' உதவியுடன் யாழ் மாநகராட்சி மன்றத்தால் நடத்தப்படும் மாநகராட்சி மன்ற சுகாதாரத் தொண்டர்களுக்கான மாதாந்தப் பயிற்சி வகுப்பு இன்று காலை 8.30 மணியளவில் யாழ். பிரதான வீதியில் உள்ள ஜுபிலி ஞாபகார்த்த மகப்பேற்று நிலையத்தில் நடைபெறும். (உ-162)

கார்களை பதியுமாறு கோரிக்கை

யாழ். மாவட்டத்தில் பயணிகளை வாடகைக்கு ஏற்றிச் செல்லும் சேவையில் ஈடுபட்டு வரும் சகல மோட்டார் கார்களையும் நாளை 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

மேற்படி மோட்டார் கார்களின் உரிமையாளர்கள் அவற்றுக்குரிய உரிமைச் சான்றிதழ்களுடன் யாழ். பஸ் நிலையத்தில் உள்ள தனியார் போக்குவரத்துப் பகுதிக் காரியாலயத்தில் சமுகமளித்து தமது மோட்டார் கார்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

கிளாலிக்கான சேவையில் ஈடுபடுத்துவதற்கு வசதியாகவே அவை பதிவு செய்யப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

பரீட்சை ஒத்திவைப்பு

நீர்வேலி காமாட்சியம்பாள் இந்து பரிபாலனசபையினர் இன்று நடத்தவிருந்த சமய பாடப் பரீட்சை தற்கால சூழ்நிலை காரணமாக எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (ஒ-110)

ஊழியருக்கு அழைப்பு

வ.பி.போ. சபையின் பருத்தித்துறைச் சாலை ஊழியர்கள் அனைவரையும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு சாயில முகம் அளிக்கும்படி சாலை முகாமையாளர் கேட்டுள்ளார்.

விரச்சாவு

மட்டக்களப்பு ஆயித்தியமலை மகாவலி ஆற்றுப் பகுதியில் கடந்த 7 ஆம் திகதி மாலை 5 மணியளவில் இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் —

விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான ராஜவித்தன் (இமானுவேல்— ரமேஸ்— [illegible]) [illegible] கொல்லப்பட்டார். (இ-5)

சத்தியசாயி பாபா பிறந்த தினம்

யாழ்ப்பாணம், நவ. 20

ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 68 ஆவது பிறந்ததினக் கொண்டாட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருநெல்வேலி பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலைய மண்டபத்தில் அதிகாலை 4-45 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (த)

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தி வரும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி ஆடு களத்தில் ஆரம்பமாகும்!

இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியைப் எதிர்த்து பற்றீஷியன் கோல்ட்ஸ் அணி மோதும்.

முன்னதாக பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் — 3 ஆம் இடத்தைப் பெறும் அணியைத் தெரிவு செய்வதற்கான — ஆட்டத்தில் ஜொனியன்ஸ் சிவப்பு அணியை எதிர்த்து யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் அணி மோதும்.

சென்பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. பிதா ஏ. ஜ. பேர்னாட் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

★ ★ ★

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் முதலாம் இரண்டாம், மூன்றாம் பிரிவு உதைபந்தாட்ட அணிகளுக்கும் நாவாந்துறை சென்மேரிஸ் அணிகளுக்குமிடையிலான — கிநேகபூர்வமான — உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணி முதல் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (உ-20)

புதிய களஞ்சியம்

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவின் புதிய களஞ்சியம் ஒன்று நேற்று திறந்து வைக்கப்பட்டது.

பழுதடைந்த நிலையில் இருந்த வின்ஸர் தியேட்டர் கட்டடம் திருத்தப்பட்டு, தற்சமயம் களஞ்சியமாக மாற்றப்பட்டுள்ளது. மா இங்கு களஞ்சியப்படுத்தப்படும். (உ-3)

முன்னாள் அரச அதிபர் விபத்தில் மரணம்

கொழும்பு நவ. 20

யாழ்ப்பாண மாவட்டத்தின் முன்னாள் அரச அதிபர் விமல் அமரசேகர நேற்றுமுன் தினம் விபத்தொன்றில் மரணமானார் என்று அறிவிக்கப்பட்டது.

துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் இவர் பின்னர் பணியாற்றினார். (ஒ-எ)

கேணியில் மூழ்கி மரணம்

நல்லூர் சட்டநாதர்கோயில் கேணியில் குளித்துக் கொண்டிருந்த 12 வயதுச் சிறுவன் ஒருவன் அக்கேணியில் மூழ்கி மரணமானான்.

நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஜமுனா வீதியைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன் புவிக்குமரன் என்ற சிறுவனே உயிரிழந்தான் (உ-162)

பரீட்சை நிலையம் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 20

இன்றும், நாளையும், எதிர்வரும் 27ஆம் திகதியும் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருந்த வங்கியாளர் பரீட்சை நல்லூர் சாதனா டி. சி. த க. பாடசாலையில் நடைபெறும் என்று யாழ். கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது. (உ-3)

விபத்தில் மரணம்

புதுடில்லி, நவ. 20

இந்திய மத்திய அமைச்சர் எட்வர்டோ பெலராடோ பயணம் செய்த கார் நேற்று முன்தினம் விபத்துக்குள்ளானதில், அவரது மனைவி உயிரிழந்தார்.

அமைச்சரும் அவரது இரு புதல்விகளும் காயமடைந்தவர் என்று அறிவிக்கப்படுகிறது.

புதுடில்லி நகரில் அவ்விபத்து நடந்தது.

அவரது கார் புதுடில்லி விமான நிலையத்துக்குச் சென்றுகொண்டிருந்தபோது, ட்ரக் ஒன்றுடன் மோதியது.

தென் ஆபிரிக்காவுக்கு புதிய அரசமைப்புச் சட்டம்

21 கட்சிகள் கைச்சாத்திட்டன

ஜோஹன்னஸ்பேர்க், நவ. 19

தென்ஆபிரிக்காவில் மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக இடம்பெற்று வரும் சிறுபான்மை வெள்ளை இனத்தவரின் ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கும் புதிய அரசமைப்புச் சட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது.

பெரும்பான்மை கறுப்பு இன மக்களின் ஆட்சி அங்கு ஏற்பட புதிய அரசமைப்பு வழிவகுத்துள்ளது.

புதிய அரசமைப்புச்சட்டநகலில் 21 அரசியல்கட்சிகளின் தலைவர்கள் கடந்த புதன்கிழமை கைச்சாத்திட்டனர்.

தீவிரவாத வெள்ளை இனத்தவரின் பழைமைவாதக் கட்சி இந்த நகல் அரசமைப்புச் சட்டத்தில் கைச்சாத்திடவில்லை.

நகல் அரசமைப்புத் திட்டம் அங்கீகாரத்துக்காக நாடாளுமன்றத்தில் அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்பட விருக்கிறது.

புதிய அரசமைப்பின் கீழ் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி தென் ஆபிரிக்காவில் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் இத்தேர்தல் நடத்தப்படும்.

முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை

கொழும்பு, நவ. 20

கிழக்கிலும் மற்றும் வவுனியாவிலும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்வதற்கான கால எல்லையை ஐந்திலைக்கும்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசைக் கேட்டிருக்கிறது. (உ-எ)

தரிபார்கவை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முறுத்தி அவர்களுக்கு பீதியை உண்டு பண்ணவும், பழிவாங்கும் நடவடிக்கையாகவும் விமானப் படையினர் நடத்தும் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

குண்டு வீச்சு அனர்த்தம்

★ பூநகரித் தாக்குதலை அடுத்து 'சுப்பசொனிக்' விமானம் யாழ். செயலகத்தைத் தாக்கி, பலரைக் கொன்றும் காயப்படுத்தியும் உள்ளது. காயப்பட்டவர்களில் யாழ். அரச அதிபரும் ஒருவர்.

★ சென். ஜேம்ஸ் தேவாலயத்தையும் குண்டு வீசி நாசமாக்கி பலரைக் கொன்று உள்ளது.

★ பாதுகாப்பு வலயத்திற்குள் குண்டுவீசி,வலயத்திற்குள் இருக்கும் யாழ். ஆஸ்பத்திரி சட்டடத்தை சேதமாக்கி நோயாளர் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் திகிலை ஏற்படுத்தி உள்ளது.

★ கிளிநொச்சி, முல்லைத்தீவு அரச மருத்துவ மனைகளும் கூட குண்டு வீச்சுக்கு இலக்காகின.

★ சாவகச்சேரி சந்தைக் கட்டடம் குண்டு வீசி சேதமாக்கப்பட்டது.

இந்த இடங்கள் அனைத்தும் புனித வழிபாட்டுக்கும், பொதுச் சேவைகளுக்கும் பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்படுபவை. அவை பெரிய கட்டடங்கள். எளிதில் தெளிவாகத் தெரிபவை. இலக்குத் தவறி இவற்றின் மீது இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகக் கூறப்படுவது நம்பத்தகுந்ததல்ல.

தனது பொறுப்பை அரசு துறந்தது

தனது செயலகத்தையே குண்டுவீசித் தாக்குவதற்கு ஓர் அரசு அனுமதிப்பதைப் பார்க்கும்போது —

எந்த இடத்தை நிர்வகிக்கும் பொறுப்பையும், மக்களைக் காப்பாற்றுவது என்ற பொறுப்பையும் அது துறந்து விட்டது என்பதைத் தவிர வேறு எந்த முடிவுக்கும் நாம் வரமுடியாது.

யுத்தம் நடக்கும் நாடுகளில் கூட வைத்தியசாலைகள் பாதுகாக்கப்பட்டு, பேணப்பட்டு, காப்பாற்றப் படுகின்றன.

அந்த தர்மத்தையும் மீறி ஸ்ரீலங்கா அரசு மருத்துவமனைகள் மீதும் கூட குண்டுகளை வீச அனுமதித்திருக்கிறது.

'சகல மதங்களையும் மதிக்கிறோம்; எமது நாடு தர்மமுள்ள நாடு' — என்று கூறிக் கொள்ளும் ஓர் அரசு வணக்கஸ்தலங்கள் மீது குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்த அனுமதிப்பது எமக்கு வியப்பைத் தருகிறது.

இத்தகைய குண்டு வீச்சுத் தாக்குதல்கள் எழுந்தமானத்தில் — இருந்தாற்போல் — நடப்பவையல்ல; அவை மீண்டும் மீண்டும் தொடர்ந்து நடக்கின்றன.

ஆகையால் இத்தகைய தாக்குதல்கள், தமிழர்களுக்கு எதிரான அரசின் கொள்கையின் ஒரு பகுதி என்று முடிவு செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

அரசு வடக்கில் மேற்கொண்ட விமானத் தாக்குதல்கள் பற்றிய புள்ளி விவரத்தைக் கவனித்தால் —

அந்தத் தாக்குதல்களில் எப்போதும் — எந்த வித வேறுபாடும் இன்றி — பாதிக்கப்பட்டிருப்பது அப்பாவி பொது மக்களே என்பது புலனாகும்.

அப்பாவி மக்களும் அவர்களின் சொத்துக்களுமே இவ்வாறு அழிக்கப்படுகின்றன.

எனவே இத்தகைய தாக்குதல்கள் திட்டமிடப்பட்ட அரச பயங்கரவாதமே என ஒருவர் முடிவு செய்வதை எவ்வாறு தவிர்க்க முடியும்?

ஒன்றுமறியாத அப்பாவி மக்களை விமானப்படை படுகொலை செய்கின்றது. ஆகவே இந்த விமானப் படையை கட்டுப்படுத்தி, அதை அரச பயங்கரவாதத்தின் கருவியாக செயற்படச் செய்யாமல் தவிர்க்குமாறு நாம் அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுக்கிறோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

பருத்தித்துறை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படையினரின் தாக்குதலில் கற்கோவளத்தைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை, நாகர் கோயிலைச் சேர்ந்த தேவராசா கலைச்செல்வன் (வயது 19), செல்லத்துரை ரவி (வயது 15) ஆகியோர் காயமடைந்தனர்.

இவர்கள் மந்திகை ஆஸ்பத்திரியிலும் அம்மன் அரசினர் ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டனர்.

படையினரின் தாக்குதல்களினால் கரையில் நின்ற சில கால்நடைகள் இறந்தன. கரையோரப் பகுதிகளில் சில வேட்டுக்கள் வீழ்ந்தன. (உ 173)

பூநகரியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிய நிலையில் இத்தகைய தவறான தகவல்களைக் கூறியிருக்கலாம் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

பூநகரியில் புலிகள் தொடுத்த பேரடியின் வேகத்தில் சிப்பாய்களுக்கு புலி வீரர்கள் வெள்ளைக்காரர்கள் போல் தோற்றமளித்திருப்பர் என்று இது குறித்துக் கருத்து வெளியிட்ட அவதானிகள் தெரிவித்தனர்.

தேசிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிதான இடங்களில் அலங்கார வளைவுகள், மாவீரர் பதாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. வட்டவைகள், கடற்புலிக் கோட்டங்கள் ரீதியாக விசேட பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் அந்தந்தப் பகுதி மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்படும். மக்கள் அவற்றுக்கு அஞ்சலி செலுத்துவர்; மாவீரர்களின் பெற்றோர்களும் இவ்வாரத்தில் நடக்கும் நிகழ்வுகளில் கௌரவிக்கப்படுவர்.

மாவீரர் நாளை தனியார் கல்வி நிலையங்களும் சிறப்பாகக் கொண்டாடவுள்ளன. கல்வி நிலையங்கள் இரத்த தானம், சிரமதானம், போராளிகளைப் பராமரித்தல், கொடி வணக்கம், ஒளி ஏற்றும் வைபவங்கள் என்பவற்றில் இணைந்து செயற்படும் என்றும் யாழ். மாவட்ட தனியார் கல்வி நிலைய ஒன்றியச் செயலாளர் தெரிவித்துள்ளார். (அ-173)

வீட்டுத் தோட்டம் செய்திடு - உன்
நோட்டுச் செலவைக் குறைத்திடு

digitized by noolaham foundation
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

நல்ல இன ஆட்டுக்கடாய் இரண்டு விற்பனைக்கு உண்டு. நிறம் கறுப்பு, தொடர்பு: நா. பாலன், No-56, பாண்டியந்தாழ்வு, கொழும்புத்துறை வீதி (கடை), சந்தனமாதாகோயில் முன்பாக. (28102)

அடைவைக்க உகந்த பன்டம், பாமாஸ், கிலிக்கி, பிராமா, பிறேசில், போலிஸ் முட்டைகளும், குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. இல. 984 (61) நாவலர் வீதி, ஐந்து சந்தி, நாவாந்துறை றோட், யாழ்ப்பாணம். (28110)

தேவை

பற்பொடி, நீலம், மியாக் காய்ப் பவுடர் ஒட்டுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை. எமது தயாரிப்புக்களை சைக்கிளில் வியாபாரம் செய்யக் கூடிய ஆண்கள் தேவை. ஜெயலட்சுமி இன்டஸ்ரீஸ், பாடசாலை வீதி, ஆறுகால் மடம். (28091)

பங்காளிகள் தேவை

யாழ். நகரில் பல்பொருள் களஞ்சியத்திற்கு ஆர்வமுள்ள பெண் பங்காளிகள் உடன் தேவை முழுவிவரங்களுக்கும் உடன் நேரில் தொடர்பு கொள்ளவும். இ. ஸ்ரீகாந்தன், இல: 89, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (28100)

விண்ணப்பப்படிவம்

மக்கள் வங்கியில் எழுதுவினைஞர், சுருக்கெழுத்தாளர் பதவிகளுக்கான விண்ணப்பப் படிவம் 2/-க்கு பெற்றுக்கொள்ளலாம். அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி/6554)

வகுப்புக்கள்

வகுப்புக்கள் வழமைபோல் எதிர்வரும் 20 - 11 - 1993 சனிக்கிழமை முதல் ஆரம்பமாக உள்ளன. நிர்வாகி, Yogi Home Science Academy, 71, Nayanmar Veethy, Kachcheri Nallur Road, Nallur, Jaffna. (28076)

கால்நடை மருந்துகள்

கால்நடை மருந்துகள் விற்பனைக்குண்டு. மேற்படி மருந்து வகைகள் தேவைப்படுவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்: யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு. (சி-6370)

தாழமுக்கம்

கொழும்பு, நவ. 20

வங்காளா விரிகுடாவுக்கு தென்மேற்கே இலங்கையின் கிழக்கு பகுதியில் வளிமண்டலத்தில் தாழமுக்கம் ஏற்பட்டுள்ளதாக வழிமண்டல திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனால் வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மாகாணங்களிலே மழையும், இடியுடன் கூடிய மழையும் அவ்வப்போது காணப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. (உ-3)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறி
இரண்டாம் அரையாண்டுப்
பரீட்சை - 1993

மேற்குறிப்பிட்ட பரீட்சை முன்னர் அறிவிக்கப்பட்ட திகதிகளில் நடைபெறமாட்டாதென்றும், கீழ்வரும் திகதிகளாகிய 04 - 12 - 93, 05-12-93, 11-12-93, 12-12-93 திகதிகளில் நடைபெறும் என்பதனை மாணவர் கவனத்தில் கொள்ளவும்.

— பதிவாளர்.

(சி-6380)

பழைய மாணவர் சங்கம்

யா/ வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் 23-11-1993 ஆம் திகதி நடைபெறவிருந்த அங்குரார்ப்பணக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. கூட்டத் திகதி பின்னர் தெரியப்படுத்தப்படும்.

— அதிபர்

(28112)

வ.பி.போ. சபை பருத்தித்துறைச் சாலை ஊழியர்களுக்கு அழைப்பு

நாளை 21-11-93 ஆம் திகதி காலை 8 (எட்டு) மணிக்கு அனைத்து ஊழியர்களும் தவறாது சாலையில் சமுகம் அளிக்கவும்.

சாலை முகாமையாளர்,
வ. பி போ. சபை,
பருத்தித்துறை.

(28113)

வீர அஞ்சலி

குழந்தைவேலு சத்தியேந்திரா

(2ஆம் லெப்டினன்ட் சிவகுமாரன்)

எம்மை வளர்த்த எம் ஆசான்;
தம்பிள்ளை துயர் கேட்டு
துவன்று நிற்கும் இவ்வேளை
அம்மைந்தர்க்கு எம் இதய
அஞ்சலியை காணிக்கை ஆக்குகின்றோம்.

புதிய உயர் கல்லூரியின்
கலைமாணி 1ம் வருடம்
(பேராதனை பல்கலைக்கழகம்)
மாணவர்கள்.

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம். (சி-6555)

கண்ணீர் அஞ்சலி

அமரவதி வரதலட்சுமி அருளானந்தம்

(ஆசிரியை - வண்ணை வைத்தீஸ்வரா கல்லூரி, யாழ்ப்பாணம்)

திருமதி வரதலட்சுமி அருளானந்தம் அவர்களின் மறைவையொட்டி, அன்னாரின் அன்புக் கணவரினதும் (திரு. அருளானந்தம், தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்), மழலை மகன் அர்ச்சுனாவினதும், உற்றார், உறவினரினதும் ஈடுசெய்ய முடியாத இழப்பில் நாமும் மனப்பூர்வமாகப் பங்குபற்றுகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தேசிய சேமிப்பு வங்கி
ஊழியர்கள்.

(6813)

நிழலாகி வருடம் ஒன்றாகிறது....
நீளும் துயரோடு உள்மெ
நினைக்கின்றோம்...



மலர்வு: 26 — 12 — 1954

உதிர்வு: 30 — 11 — 1992

அமரர்
தாமோதரம்பிள்ளை தர்மசேகரம்

(ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கி அலுவலர்)

திதி: 20 - 11 - 1993

நினைவுகள் சாவதில்லை அவை நீண்டு கொண்டே செல்லும்.....
பூதவுடல்தான் பூதலத்திலிருந்து மறைந்தது, புகழுடல் மறைவதில்லை.....
நினைவுகள்..... சாசுவதமானவை..... அவை நீண்டு கொண்டே செல்லும்.....
நாம் இறக்கும் வரை, நீ இறக்கவில்லை.....
நினைக்கின்றோம் நினைக்கின்றோம், உன் நினைவோடு வாழ்கின்றோம்.....
நினைவாய், நிழலாய், நித்தியனாய் நீ வாழ்கின்றாய்.

தாயார், மனைவி, மகன், சகோதரன், சகோதரி, மைத்துனர்கள், மருமக்கள்.

புத்தூர் மேற்கு,
புத்தூர.

(28306)

ஊரடங்கு வேளையில்

தொண்டு நிறுவனப் பணிகள் மட்டுப்படுத்த அறிவுறுத்தல்:

[illegible] யாழ்ப்பாணம், நவ. 20

யாழ். மாவட்டத்தில் இயங்கும் அரச சார்பற்ற தொண்டர் அமைப்புகளின் பணிகளை ஊரடங்கு வேளையில் மட்டுப்படுத்துமாறு பாதுகாப்பு அமைச்சு கொழும்பில் உள்ள அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் அறிவுறுத்தியிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்தில் தற்சமயம் ஊரடங்கு அமுல் செய்யப்பட்டுள்ளதாகவும் —

அந்த நேரத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை நிறுத்துமாறும் — பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தியுள்ளதாம்

யாழ். மாவட்டத்தில் இயங்கும் அரச சார்பற்ற அமைப்புகளின் அலுவலகங்கள் முன்பாக மக்கள் கூடுவதற்கு அனுமதிக்கக் கூடாது என்றும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்தது.

(உ-3)

விதை உருளைக் கிழங்கு 'றுகுணு' வில் ஏற்றப்படுகிறது

உரவகைகளும் வருகின்றன

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கவென ஹொலண்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக் கிழங்கு கொழும்பு துறை முகத்தில், 'றுகுணு' கப்பலில் ஏற்றப்பட்டு வருவதாக கொழும்பில் இருந்து யாழ். அரச அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்துக்கு 420 மெற்றிக் தொன் உரமும் 'றுகுணு' கப்பலில் எடுத்து வரப்படவுள்ளது.

25அல்லது26 ஆம் திகதி பருத்தித்துறை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் இக்கப்பலில் 350 மெற்றிக் தொன் அமோனியா, 50 மெற்றிக் தொன் பொட்டாஸ், 20 மெற்றிக் தொன் ரி.டி.எம் கலவை உரம் என்பனவும் அடங்கும் என அறிவிக்கப்படுகிறது.

மேலும் ஆயிரம் மெற்றிக் தொன் உரத்தைக் கொள்வனவு செய்வதற்கான ஒழுங்குகள் மேற்படி திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

(ஒ-க-3 162)

சுதந்திரக் கட்சியை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும் கட்சி வரிசையில் ஆசனங்கள் நிரம்பியிருந்தாலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, அமைச்சர்கள் பெல்டஸ் பெரேரா, சாகுல் ஹமீது ஆகியோர் சபையில் பிரசன்னமாகவிருக்க வில்லை.

சுதந்திரக் கட்சி எம்.பிக்களான அனுருத்தரத்வத்தை, தர்மசிறிசேனநாயக்கா ஆகியோரை அனுரா கடுமையாகத் தாக்கிப் பேசினார்.

அவரின் ஒன்றரை மணி நேரப் பேச்சின் போது, சு.க.வின் எம். பியான டி.எம். ஜயரத்தினவுடன் பலதடவைகள் நேரடி வாக்குவாதத்தில் அவர் ஈடுபட வேண்டியதாக இருந்தது.

இதனால் சபையில் அமளி துமளி ஏற்பட்டது.

தமது உரையில் அனுரா கூறியதாவது:-

சுதந்திரக்கட்சி நீண்டகாலமாக வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, பணவீக்கம் குறித்து கருத்து வெளியிட்டு வந்துள்ள போதிலும், ஒவ்வொரு தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சியே வெற்றி பெற்று வந்துள்ளது. இதன் காரணம் அந்தக்கட்சி மக்கள் நம்பும் மாற்றுத்திட்டம் ஒன்றை முன்வைக்க முடிந்ததாகும்.

சுதந்திரக்கட்சி ஊடாக அப்படி ஒரு மாற்றுத் திட்டத்தை முன்வைக்க நான் முயற்சி செய்தேன். அவ்வாறு செய்வதற்கு எனக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை.

விவசாயிகள் கஷ்டப்படுவதாக சுதந்திரக்கட்சி இன்று கூறுகிறது. ஆனால் கடந்த மாகாணசபைத் தேர்தல்களில் விவசாயப் பகுதிகளில் ஐக்கிய தேசியக்கட்சி வெற்றியடைந்ததைப் பார்க்கும்போது இக் கூற்றை ஏற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது.

நாட்டு மக்களில் அக்கறை கொண்டுள்ள கட்சியாக சுதந்திரக்கட்சி இருக்குமானால், பொருள்களின் விலைகளைக் குறைப்பதற்கு அது பதவிக்கு வந்தால் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை கூறியிருக்க வேண்டும். அதை விடுத்து விலைகளைக் குறைக்கவிருப்பதாக மாத்திரம் சொல்லி விட முடியாது.

சுதந்திரக்கட்சி அண்மையில் வெளியிட்ட விஞ்ஞாபனத்தைத் தயாரிப்பதில் நான் பங்கு கொள்ளவில்லை.

1970 — 77 வரை பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கிய மக்கள், சுதந்திரக் கட்சியின் விஞ்ஞாபனத்தில் உறுதி அளிக்கப்பட்ட நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

— இவ்வாறு அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

கண்ணீர் அஞ்சலி

ஆரோக்கியநாதர் சஜீவன்

(கனியன்/நிசாந்)

பூநகரி முகாம் தகர்ப்பில் 12 - 11 - 1993 இல் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட எங்கள் சக ஆசிரியையின் மைந்தனும், எமது பழைய மாணவனுமாகிய செல்வன் ஆரோக்கியநாதர் சஜீவனுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.

(28111)

வீர அஞ்சலி

2ஆம் லெப். சிவகுமாரன்

(குழந்தைவேலு சத்தியேந்திரா)

வரலாறு படைத்த பூநகரி முகாம் தகர்ப்பின் போது களத்தில் வீரச்சாவை தழுவிக் கொண்ட எமது தமிழ் விரிவுரையாளர் நா. குழந்தைவேலு அவர்களின் கனிஷ்ட புத்திரன் 2ஆம் லெப். சிவகுமாரன் அவர்களுக்கு எமது இதயம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியை செலுத்திக் கொள்கின்றோம்.

இவருடன் வீரமரணமடைந்த சகல போராளிகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம்.

பேராதனை பல்கலைக்கழக வெளிவரிப் பட்டப்படிப்பு
கலைமாணி இறுதியாண்டு மாணவர்கள்
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-6556)

மணமகள் தேவை

இந்து மத உயர் குடும்பத்தைச் சேர்ந்த — கனடாவில் பணிபுரியும் — 37 வயது M.Sc. என்ஜினியர் மணமகனுக்கு அழகும், படிப்பும், குணமும், சிறந்த குடும்பப் பின்னணியும் உள்ள மணமகள் தேவை.

முழு விவரங்களுடனும் விண்ணப்பிக்கவும்:-

விளம்பர இல:- 571
மே/பா:- உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (சி-6381)

மரண அறிவித்தல்கள்

பிரம்ம ஸ்ரீ
விஸ்வநாதக்குருக்கள் பரமேஸ்வரசர்மா

(ரமதா)

கல்வளை சண்டிலிப்பாயைச் சேர்ந்த, காலஞ்சென்ற பிரம்ம ஸ்ரீ. விஸ்வநாதக்குருக்கள் — அன்னரத்தின அம்மா ஆகியோரின் அருமைப் புத்திரன் பிரம்ம ஸ்ரீ. வி. பரமேஸ்வரசர்மா (ஆசிரியர், யாழ் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம்) 19. 11. 1993 அன்று காலமானார்.

அன்னார் நாகபூஷணியின் அன்புக் கணவரும், காயத்திரி, கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பிரம்ம ஸ்ரீ. சோ. சீதாராமக்குருக்கள் (கைதடி — நுணாவில் முருகன் கோவில் பிரதமகுரு), திருமதி. செல்லம்மா சீதாராமக்குருக்கள் ஆகியோரின் மருமகனும், முத்துலிங்கசர்மா (கனடா), விவேகானந்தசர்மா (பிரதி முகாமையாளர், இலங்கை வங்கி வடபிராந்தியக் காரியாலயம், கொழும்பு), விஜயானந்தசர்மா (சுவிஸ்), நகுலேசசர்மா (கனடா), ஞானேஸ்வரி, புஷ்பராணி (சுவிஸ்), சர்வேஸ்வரி, விக்னேஸ்வரசர்மா (கொழும்பு), கணேசன் (பிரான்ஸ்), மங்களேஸ்வரி, யோகேஸ்வரன் (நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிரம்ம ஸ்ரீ. இ. சபாரத்தினக்குருக்கள் (பன்னாலை, வரத்தலம் சுற்பக விநாயகர் ஆலய ஆதீனகர்த்தா, இளைப்பாறிய அதிபர்) பிரம்ம ஸ்ரீ. ச. கணபதீஸ்வரசர்மா (சுவிஸ்), பிரம்ம ஸ்ரீ. சோ. சிவகடாட்சசர்மா (இளைப்பாறிய தொலைத்தொடர்புப் பரிசோதகர்), சரஸ்வதி, பிரேமாவதி. (கனடா), அமிர்தகலா, உஷா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை (20-11-1993) காலை இல. 197/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம், இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக பூடவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
திருமதி. நாகபூஷணி
பரமேஸ்வரசர்மா
(மனைவி)

இல. 197/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (28114)

திருமதி இராசம்மா சோமசேகரம்

திருமதி இராசம்மா சோமசேகரம் 19-11-93 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற C. C. சோமசேகரம் (சட்டத்தரணி) அவர்களின் அன்பு மனைவியும், டாக்டர் சண்முகலிங்கம், சோமாவதி, காலஞ்சென்ற சோமஇந்திராணி (சட்டத்தரணி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சோமகலாவல்லி, டாக்டர் மகேந்திரன், சண்முகமூர்த்தி ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று சனிக்கிழமை (20-11-93) மாலை 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
டாக்டர் சோ. சண்முகலிங்கம்
180 A, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (28116)

அன்னலக்சுமி இராஜபிள்ளை

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி அன்னலக்ஷ்மி இராஜபிள்ளை (வட்டு. இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி முன்னாள் ஆசிரியை) நேற்று சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற Dr.V. இராஜபிள்ளையின் (இளைப்பாறிய Pathologist, யாழ். போதனா வைத்தியசாலை) அன்பு மனைவியும், Dr. R. V. அகிலன் (U.K.), Dr. R K பரதன் (U.S.A.), R.N. வைதேகி (ஆங்கில போதனாசிரியை, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr. A. சாந்தி மனோகரி (U.K.), B. தவமலர் (U.S.A.), ஆகியோரின் அன்பு மாமியாரும், A. அர்ஜுனன் (U.K.), A. சஞ்ஜீவன் (U.K.), B. ஜனகன் (U.S.A.) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், (S.A. வாணர் இளைப்பாறிய ரயில் நிலைய அதிபர், கொழும்பு) S. தேவராஜா (வட்டுக்கோட்டை), A.S. நவரத்தினம் (இளைப்பாறிய Chief Computer Engineer, British Airways, U.K.) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் ஆலோலை ஒழுங்கை, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (20-11-93) சனிக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக, நண்பகல் 12-00 மணியளவில் வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
R.N. வைதேகி
(மகள்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 20 - 11 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org